செ.வெ.எண்:49/2016 நாள்:26.11.2016

**சிவகங்கை அரண்மனைவாசலில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு பேரணியை**

**மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் துவக்கி வைத்தார்.**

சிவகங்கை அரண்மனைவாசலில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில், சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் திரு.பிஆர்.செந்தில்நாதன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் துவக்கி வைத்தார்.

இப்பேரணியில் சிவகங்கை மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவியர்கள், பணியாளர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், மருத்துவர்கள் மற்றும் மாதா கல்லூரி மாணவியர்கள் ‘‘உறுப்பு தானம் செய்வோம், உயிர் காப்போம்’’, ‘‘இருக்கும் வரை இரத்த தானம், இறந்த பின் உடல் தானம்’’, ‘‘உடல் உறுப்பு தானம் செய்வோம், உடல் எனும் கோவிலில் உயிர் எனும் தீபம் ஏற்றுவோம்’’ போன்ற வரிகள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் ஊர்வலமாகச் சென்றனர்.

இந்நிகழ்ச்சியில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.மாரியப்பன்கென்னடி, மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.செளந்தரராஜன்,இணை இயக்குநர் மரு.சுரேஷ்குமார், துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் மரு.யசோதாமணி மற்றும் மருத்துவக் கல்லூரி கண்காணிப்பாளர், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.